## செய்திக் குறிப்பு

PM Surya Ghar எனப்படும் பிரதம மந்திரியின் இலவச வீட்டு சூரியமின் ஒளித்திட்டத்தின் கீழ் இதுவரை புதுச்சேரி மாநிலத்தில் 1684 இல்லங்களில் மின் நுகர்வோர்கள் சூரிய மின் ஒளித்தகடுகள் பொருத்தி இலவச மின்சாரம் பெற்று பயனடைகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 1 KWpற்கு ரூ.30,000, 2 KWp ற்கு ரூ. 60,000, 3 KWp மற்றும் அதற்கு மேல் ரூ. 78,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ 12.5 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறுவுவதன் மூலம் மாதம் சுமார் 150 Unit முதல் 450 Unit வரை மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம். ஆண்டின் இறுதியில் அதாவது 31 மார்ச் வரை ஒவ்வொரு சூரிய ஒளி பயன்படுத்தும் நுகர்வோர் தாங்கள் மின்துறைக்கு வழங்கிய உபரி மின்சாரத்திற்கு சராசரி மின் கொள்முதல் தொகை (Average Power Purchase Cost) எனப்படும் ஒரு யுனிட்ற்கு ரூ. 5.77 வீதம் கணக்கிடப்பட்டு அவரவர் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும். மேலும், இதுநாள் வரை Bi Directional Meter எனப்படும் Solar Meter நுகர்வோரே பொருத்தி வந்த நிலையில் தற்பொழுது தேவையான Bi Directional Meter மின் துறையால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால் PM Surya Ghar திட்டத்தில் விண்ணப்பிக்கும் அனைத்து நுகர்வோர்களுக்கும் இலவசமாக மின் துறை சார்பில் பொறுத்தப்படும். மின் நுகர்வோர்கள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Er. G. KANIYAMUTHAN,
B.E., MIE., D.MA.M., PGDBA., PGDCA.,
SUPERINTENDING ENGINEER-cum-HOD
ELECTRICITY DEPARTMENT
PUDUCHERRY